மயிலாடுதுறை மாவட்டம் மயிலாடுதுறை நகராட்சிக்கு உட்பட்ட ஆரோக்கியநாதபுரத்தில் அரசுக்குச் சொந்தமான இடத்தில் தமிழில் முதல் நாவல் எழுதிய மாயூரம் முன்சீப் வேதநாயகம் அவர்களுக்கு ரூபாய் 3 கோடி மதிப்பீட்டில் அரங்கம் மற்றும் சிலை அமைய உள்ள இடத்தினை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் 22/06/2023 நேற்று முன்தினம் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். ஆய்வின் போது மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.பி.மகாபாரதி, பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் பால ரவிக்குமார், மயிலாடுதுறை வருவாய் கோட்டாட்சியர் செல்வி. வ.யுரேகா, பொதுப்பணித்துறை உதவி செயற் பொறியாளர் ராமர், மயிலாடுதுறை நகர் மன்றத் தலைவர் செல்வராஜ் மற்றும் பலர் உடன் இருந்தனர்.

மயிலாடுதுறையில் தில்லையாடி வள்ளியம்மை நினைவகக் கட்டட புனரமைப்பு பணி!

அமைச்சர் மு.பெ.சாமிநாதன் ஆய்வு செய்தார்!

மயிலாடுதுறை, ஜூன் 24 -

மயிலாடுதுறை மாவட்டத்தில் தில்லையாடி வள்ளியம்மை நினைவு மண்டபம் ரூ.89.54 லட்சம் செலவில் மிக விரைவில் நினைவக கட்டட புனரமைப்பு பணி மற்றும் மயிலாடுதுறையில் மாயூரம் முன்சீப் வேதநாயகம் அவர்களுக்கு ரூ.3 கோடியில் அரங்கத்துடன் கூடிய சிலை அமைக்க தேர்வு செய்த இடத்தை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் 22.06.2023 அன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடி வட்டம், தில்லையாடியில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தியாகி தில்லையாடி வள்ளியம்மை நினைவு மண்டபம் ரூ.89.54 லட்சம் செலவில் மிக விரைவில் நினைவக கட்டட புனரமைப்பு பணி மற்றும் மயிலாடுதுறையில் மாயூரம் முன்சீப் வேதநாயகம் அவர்களுக்கு ரூ.3 கோடியில் அரங்கத்துடன் கூடிய சிலை அமைக்க தேர்வு செய்த இடத்தை 22.06.2023 அன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

ஆய்வுக்குப் பின் தில்லையாடியில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் செய்தியாளர்களிடம் பேசியதாவது:-

மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடி வட்டம், தில்லையாடியில் தியாகி தில்லையாடி வள்ளியம்மை நினைவாக இந்த மண்டபம் கட்டப்பட்டுள்ளது. இந்த அரங்கம் செய்தித்துறையின் பராமரிப்பிலுள்ளது. இந்த அரங்கம் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் திருக்கரங்களால் திறந்து வைக்கப்பட்டது. தென்னாப்பிரிக்காவில் அன்றைக்கு இன வெறியினை எதிர்த்தும், காந்திய அறப்போராட்டத்தில் தனது இன்னுயிரை ஈந்து உயிர் தியாகம் செய்து கலந்து கொண்டவர்களில் ஒருவர் தில்லையாடி வள்ளியம்மை ஆவார். எனவே அவருடைய நினைவை போற்றும் வகையில் அவர்கள் தியாகத்தை மதிக்கின்ற வகையில் அரசின் சார்பில் தில்லையாடி வள்ளியம்மை நினைவு மண்டபம் கட்டப்பட்டது. 1969ல் கலைஞர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டு, 13.08.1971ல் கலைஞர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டது.

எனவே பல ஆண்டு காலம் ஆகிவிட்டதால் இதனை பராமரிக்க புதிதாக மீண்டும் செம்மைப்படுத்த வேண்டும் என்ற நோக்கில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற பின் செய்தித்துறையின் சார்பில் இது போன்ற அரங்கங்கள், விடுதலைப் போராட்டத்திற்காக கலந்து கொண்ட விடுதலைப் போராட்ட வீரர்களின் அரங்கங்கள் சிலைகள், தமிழ் மொழிக்காக போராடிய மறைந்த சான்றோர்களின் நினைவாக அரங்கத்தை அமைப்பதும், அரங்கத்தை பராமரிப்பதும், திருவுருவச்சிலை அமைக்கும் வகையில் அதற்கான நிதி ஒதுக்கப்பட்டது. எனவே இன்று இந்த நினைவு மண்டபத்தை பராமரிப்பு பணி மேற்கொள்ள பார்வையிட்டுள்ளோம்.

விரைவில் பராமரிப்பு பணி மேற்கொள்ள முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு செல்லப்படும். ஏற்கனவே செய்தித் துறை இயக்குநர் பார்வையிட்டு என்னிடம் சொல்லியிருக்கிறார். அதன் அடிப்படையில் இன்று நான் பார்வையிட்டுள்ளேன். மிக விரைவில் பராமரிப்பு பணி துவங்க இருக்கிறது. அதற்கான மதிப்பீடுகளை பொதுப் பணித்துறை சார்பில் தயாரிக்கப்பட்டுள்ளது. மிக விரைவில் பணி துவங்கப்படும். சீர்காழியில் தமிழிசை மூவர் மணிமண்டபம் கடந்த முறை நேரில் பார்வையிட்டுள்ளேன். அதுவும் முன்னாள் முதலமைச்சர் கலைஞர் அவர்களால் அமைக்கப்பட்டது.

கடந்த ஆட்சியில் பராமரிப்பு பணி செய்யாமல் இருந்துள்ளனர். தற்போது பயன்படுத்த முடியாத சூழ் நிலையில் தான் இருக்கிறது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்று ரூ.47 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு தற்போது பராமரிப்பு பணி நடைபெற்று வருகிறது. விரைவில் மக்கள் பயன்பாட்டிற்கு வரும். தில்லையாடியில் பிறந்த அருணாச்சல கவிராயர் அவர்களின் சிலை தில்லையாடி வள்ளியம்மை நினைவு மண்டபம் அருகில் வைப்பது தொடர்பாக முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு செல்லப்படும். அரங்கத்துடன் சிலை வைப்பது அரசின் கொள்கை முடிவு என தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்துள்ளார்கள். ஏனென்றால் அரசு நிகழ்ச்சி மற்றும் பொது மக்களின் சுப நிகழ்ச்சிகள் நடத்த பயனுள்ளதாக இருக்கும். தற்போது இந்த நினைவு மண்டபத்தின் பராமரிப்பு பணி முடிந்தவுடன் மாவட்ட ஆட்சியர் அவர்களின் ஒப்புதல் பெற்று சரியான முறையில் பராமரிக்கும் அரசு நிர்வாகத்துறையிடம் ஒப்படைத்து மக்கள் பயன்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

அதனை தொடர்ந்து தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் மயிலாடுதுறையில் மாயூரம் முன்சீப் வேதநாயகம் அவர்களுக்கு அரங்கத்துடன் கூடிய சிலை அமைக்க தேர்வு செய்யப்பட்டுள்ள இடத்தை ஆய்வு செய்த பின் செய்தியாளர்களிடம் பேசியதாவது:

தமிழில் முதல் நாவல் எழுதிய மாயூரம் முன்சீப் வேதநாயகம் அவர்களுக்கு அரசின் சார்பில் 24.04.2022 அன்று நடைபெற்ற செய்தி மக்கள் தொடர்புத்துறையின் மானியக் கோரிக்கையின் போது தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவின் பேரில்; மயிலாடுதுறையில் ரூ.3 கோடி மதிப்பீட்டில் அரங்கத்துடன் கூடிய சிலை அமைக்கப்படும் என அறிவித்ததை தொடர்ந்து அதற்கான இடம் மயிலாடுதுறை ஆரோக்கிய நகரில் தேர்வு செய்து இன்று நேரில் பார்வையிட்டுள்ளோம். இந்த இடம் மாவட்ட ஆட்சித்தலைவர், மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர், மயிலாடுதுறை சட்டமன்ற உறுப்பினர் ஆகியோரால் ஏற்கனவே இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. இந்த இடம் அரங்கம் அமைக்க மிகவும் பொருத்தமான இடமாக உள்ளது. அரங்கத்துடன் சிலை அமைப்பதால் பொது மக்களின் பார்வையில் அவர்கள் செய்த நற்செயல்கள் நினைவுக்கு வரும். அவர்களின் வரலாறு அடுத்த தலைமுறைக்கு எடுத்துச்செல்வதற்கு ஏதுவாக இருக்கும். எனவே தான், அரங்கத்துடன் கூடிய சிலை அமைப்பது என்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அரசின் கொள்கை முடிவு என தெரிவித்துள்ளார். மாயூரம் முன்சீப் வேதநாயகம் அவர்களுக்கு அரங்கத்துடன் கூடிய சிலை அமைக்க பணிகள் மிக விரைவாக தொடங்கப்பட்டு பணிகள் நிறைவுற்றவுடன் பொதுமக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்படும். இவ்வாறு அமைச்சர் மு.பெ.சாமிநாதன் செய்தியாளர்களிடம் பேசினார்.

இவ் ஆய்வின் போது மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.பி.மகாபாரதி, மயிலாடுதுறை வருவாய் கோட்டாட்சியர் செலவி.வ. யுரேகா, சீர்காழி வருவாய் கோட்டாட்சியர் திருமதி.உ.அர்ச்சனா, பொதுப் பணித்துறை செயற்பொறியாளர் பால ரவிக்குமார், உதவி செயற்பொறியாளர்கள் திருமதி. அல்மாஸ் பேகம், ராமர், மயிலாடுதுறை நகர் மன்ற தலைவர் என்.செல்வராஜ் மற்றும் பலர் உடன் இருந்தனர்.

கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி 21.06.2023 அன்று ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட, காந்திஜி சாலையில் ரூ.60.00 இலட்சம் மதிப்பீட்டில் நவீனப்படுத்தப்பட்ட வசந்தம் கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தினை குத்துவிளக்கேற்றி வைத்து, திறந்து வைத்தார். உடன் கைத்தறி, கைத்திறன் துணிநூல் மற்றும் கதர்த்துறை முதன்மைச் செயலாளர் தர்மேந்திர பிரதாப் யாதவ், கைத்தறி ஆணையர் மற்றும் கோ-ஆப்டெக்ஸ் மேலாண்மை இயக்குநர் கே.விவேகானந்தன், மாவட்ட ஆட்சித்தலைவர், ராஜ கோபால் சுன்கரா, ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் அ.கணேசமூர்த்தி, ஈரோடு மாநகராட்சி மேயர் திருமதி.நாகரத்தினம், சட்டமன்ற உறுப்பினர்கள் ஈ.வெ.கி.ச.இளங்கோவன் (ஈரோடு கிழக்கு), ஏ.ஜி.வெங்கடாச்சலம் (அந்தியூர்), திருமதி. சி.கே.சரஸ்வதி (மொடக்குறிச்சி), மாநகராட்சி துணை மேயர் வே.செல்வராஜ் உட்பட பலர் உள்ளனர்.

செஞ்சியில் நடைபெற்ற ஜமாபந்தி நிறைவு விழாவில்

1000 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள்!

அமைச்சர் செஞ்சி மஸ்தான் வழங்கினார்!

செஞ்சி ஜூன் 24-

விழுப்புரம் மாவட்டம் செஞ்சியில் நடந்த ஜமாபந்தி நிறைவு விழாவில் 2 கோடியே 32 லட்சம் ரூபாய் மதிப்பில் நலத்திட்ட உதவிகளை அமைச்சர் செஞ்சி மஸ்தான் வழங்கினார்.

விழுப்புரம் மாவட்டம் செஞ்சிதாலுகா அலுவலகத்தில் கடந்த 7ஆம் தேதி தொடங்கி 16ஆம் தேதி வரை ஜமாபந்தி நடைபெற்றது.

இதில் பொதுமக்கள் கொடுத்திருந்த மனுக்களில் தகுதியான 1003 நபர்களுக்கு நலத்திட்டம் வழங்கும் நிகழ்ச்சி தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் பழனி தலைமை தாங்கினார். தனித்துணை ஆட்சியர் விசுவநாதன் வரவேற்றார். சார் ஆட்சியர் கட்டா ரவி தேஜா முன்னிலை வகித்தார்.

இந்நிகழ்ச்சியில் சிறுபான்மையினர் நலன்மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள்நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் 1003 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். அப்போதுநலத்திட்ட உதவி பெற வருகை தந்த நரிக்குறவர்களை தமது இருக்கையில் அமர வைத்து ஜாதி சான்றிதழ்களை

அமைச்சர் செஞ்சி மஸ்தான் வழங்கினார்.இந்த நிகழ்ச்சி பொதுமக்கள் இடையே பெரும் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியது .

நிகழ்ச்சியில் பேசிய அமைச்சர் செஞ்சி மஸ்தான்: முதலமைச்சராக தளபதி மு. க. ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்ற 2 ஆண்டு கால ஆட்சியில் 10 ஆண்டுகாலம் செயல்படுத்த முடியாத திட்டங்களை எல்லாம் பத்து ஆண்டுகாலம் மக்களுக்கு செய்ய வேண்டிய பணிகள் இரண்டு ஆண்டு காலத்தில் செய்திருக்கிறார்கள் என்றால் கலைஞரின் மகன் மு .க .ஸ்டாலின் நாள் ஒன்றுக்கு 24 மணி நேரத்தில் 20 மணி நேரம் உழைத்துக் கொண்டிருக்கிறார்.

அந்த வகையில் எல்லோருக்கும் எல்லாம் கிடைக்க வேண்டும் என்ற அடிப்படையில் சமுதாயத்தில் சம அந்தஸ்து பெறும் வகையில் அமைச்சர், ஆட்சியர், அமர்ந்த இருக்கையில் நரிக்குறவர்களை அமர வைத்து முதலமைச்சரின் கனவை நிறைவேற்றுகின்ற ஆட்சி தான் திராவிட மாடல் ஆட்சி என அமைச்சர் செஞ்சி மஸ்தான் பெருமைப்பட தெரிவித்தார்.

இதில் ஒன்றிய சேர்மன்கள் செஞ்சி விஜயகுமார், வல்லம் அமுதா ரவிக்குமார், மேல்மலையனூர் கண்மணி நெடுஞ்செழியன், துணை சேர்மன் ஜெயபாலன், அனந்தபுரம் பேரூராட்சி தலைவர் முருகன், சமூக பாதுகாப்பு திட்ட தாசில்தார் கோவிந்தராஜ், ஆதிதிராவிடர் தனி வட்டாட்சியர் மனோகரன், மண்டல துணை வட்டாட்சியர்கள் உமா மகேஸ்வரி, குணசேகரன் ரவி, வருவாய் ஆய்வாளர்கள் கண்ணன், பழனி, கார்த்திக், பரமசிவம் மற்றும் வருவாய்த் துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர். இறுதியில் தாசில்தார் நெகருன்னிசா நன்றி கூறினார்.

இதில் 75 நபர்களுக்கு நத்தம் பட்டாவும், 425 நபர்களுக்கு இ-பட்டாவும், 46 நபர்களுக்கு இன சான்றும், 55 நபர்களுக்கு இயற்கை மரண உதவி தொகையும் என 1003 நபர்களுக்கு 2 கோடியே 32 லட்சம் மதிப்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது.

நாமக்கல் மாவட்டம் எருமப்பட்டி ஒன்றியத்தில்

ரூ.6.24 கோடி மதிப்பிலான தார் சாலை பணிகள்!

கே.ஆர்.என். இராஜேஸ்குமார் எம்.பி துவக்கி வைத்தார்!

நாமக்கல் ஜூன் 24-

நாமக்கல் மாவட்டம் எருமப்பட்டி ஒன்றியம் பொட்டிரெட்டிப்பட்டி ஊராட்சி, புதுக்கோட்டை ஊராட்சி, நா.புதுப்பட்டி ஊராட்சி, காவக்காரன்பட்டி ஊராட்சி, வரகூர் ஊராட்சி, தேவராயபுரம் ஊராட்சி, முட்டாஞ்செட்டி ஊராட்சி, வாழவந்தி ஊராட்சி, செவிந்திப்பட்டி ஊராட்சி என 9 ஊராட்சிகளுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கிராம சாலை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ. 6.24 கோடி மதிப்பீட்டில் தார் சாலை அமைக்கும் பணி துவக்க விழா நடைபெற்றது.

எருமப்பட்டி ஒன்றியக் கழகச் செயலாளரும், அட்மா குழுத் தலைவருமான பாலு (எ) பாலசுப்பிரமணியன் முன்னிலை வகித்தார்.

இந்நிகழ்ச்சியில் நாமக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் கலந்து கொண்டு தார் சாலை அமைக்கும் பணிகளை துவக்கி வைத்தார்.

எருமப்பட்டி ஒன்றியம் பொட்டிரெட்டிபட்டி ஊராட்சியில் ரூ.123.69 லட்சம் மதிப்பில் புதுக்கோட்டை பிரிவு ரோடு முதல் சுப்பிரமணி சுவாமி திருக்கோவில் வரை புதிய தார் சாலைப் பணி அமைத்தல், புதுக்கோட்டை ஊராட்சி ரூ. 33 லட்சம் மதிப்பில் காளிசெட்டிபட்டி பைபாஸ் ரோடு அருகில் புதிய தார் சாலை பணி, பொட்டிரெட்டிபட்டி ஊராட்சியில் ரூ. 11 லட்சம் மதிப்பில் பொன்னேரி கிராமத்தில் புதிய அங்கன்வாடி மையம், காவக்காரன்பட்டி ஊராட்சி ரூ. 119.48 லட்சம் மதிப்பில் ஈச்சவாரி ரோடு முதல் கோணங்கிபட்டி வரை புதிய தார் சாலை பணி,

வரகூர் ஊராட்சி ரூ. 41.77 லட்சம் மதிப்பில் வரகூர் பஸ் ஸ்டாப் முதல் கஞ்சம்பட்டி வரை புதிய தார் சாலை பணி வரகூர் பஸ் ஸ்டாப் அருகில் புதிய சோலார் மின்விளக்கு துவக்கி வைத்தல், கலைஞர் நூறாவது பிறந்த நாளை முன்னிட்டு கழக இரு வண்ணக் கொடி அமைத்தல், தேவராயபுரம் ஊராட்சியில் ரூ 10 லட்சம் மதிப்பில் புதிதாக குடிநீர் சுத்திகரிப்பு மையம், எருமப்பட்டி முட்டாஞ்செட்டி ஊராட்சியில் ரூ. 48.60 லட்சம் மதிப்பில் மெயின் ரோடு முதல் வரதராஜபுரம் செல்லிபாளையம் ரோடு வரை புதிய தார் சாலை அமைக்கும் பணி, வாழவந்தி ஊராட்சியில் ரூ. 74.55 லட்சம் மதிப்பில் ஜம்புமடை வாழவந்தி திருச்சி நாமக்கல் சாலை புதிய தார்சாலை அமைக்கும் பணி, செவிந்திப்பட்டி ஊராட்சியில் ரூ. 124.40 லட்சம் மதிப்பில் செவ்வந்திப்பட்டி மலைப்பட்டி புதிய தார் சாலை அமைக்கும் பணி, செவந்திப்பட்டி ஊராட்சியில் மலைப்பட்டி அருந்ததியர் தெரு தார் சாலை பணி, சிந்தம்பட்டியில் புதிய ஓர் அடுக்கு கப்பி சாலை பனைமரத்துப்பட்டியில் ரூ. 9.25 லட்சம் மதிப்பில் கேணி பராமரிப்பு, செவந்திப்பட்டியில் ரூ. 8.49 லட்சம் மதிப்பில் புதிய சிமெண்ட் சாலைப் பணி என ரூ. 6 கோடியே 21 லட்சம் மதிப்பிலான பணிகள் பணிகளை கே.ஆர்.என். இராஜேஸ்குமார் எம்.பி. துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட தி.மு.க. தலைமை செயற்குழு உறுப்பினர் பவித்திரம் கண்ணன், ஒன்றிய துணை செயலாளர் தங்கராசு, மாவட்ட பிரதிநிதி பாலகிருஷ்ணன் ஊராட்சி மன்ற தலைவர்கள் பொட்டிரெட்டிப்பட்டி ஊராட்சி மன்ற தலைவர் பி.துளசிராமன், துணைத் தலைவர் பி. சுரேஷ்குமார், தேவராயபுரம் ஊராட்சி மன்ற தலைவர் ரேணுகாதேவி. புதுக்கோட்டை பேபி கற்பகம், கோணங்கிப்பட்டி நேரு, தேவராயபுரம் ரவி, வரகூர் பிரகாசம், துணைத்தலைவர் ஆறுமுகம், ஒன்றிய கவுன்சிலர் விமல், முட்டாஞ்செட்டி துணைத் தலைவர் சபாரத்தினம், வாழவந்தி தலைவர் தனபால், சிவந்திபட்டி ரகுபதி, துணைத் தலைவர் சேது, ஒன்றிய கவுன்சிலர் முத்துக்கருப்பன், ஒன்றிய தி.மு.க. பொருளாளர் ராஜலிங்கம், ஒன்றிய இளைஞரணி முத்துகிருஷ்ணன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

ஈரோடு தெற்கு மாவட்டக் கழக துணைச் செயலாளர்

ஆ.செந்தில்குமார் தாயார் ஆ.பொன்னம்மாள் மறைவு!

கழகத்தினர் நேரில் அஞ்சலி!

ஈரோடு, ஜூன் 24-

ஈரோடு தெற்கு மாவட்டக் கழக துணை செயலாளர் ஆ.செந்தில்குமார் தாயாரும், ஈரோடு மாவட்ட மாணவரணி அமைப்பாளர் ஜெ.திருவாசகம் ஆயாவும், காலஞ்சென்ற பாலுசாமி (எ) கு.ஆறுமுக முதலியார் மனைவியுமான திருமதி ஆ.பொன்னம்மாள் வயது 87. வயது மூப்பின் காரணமாக 17.6.2023 சனிக்கிழமை மாலை 6.15 மணியளவில் ஈரோடு திண்டல் தெற்கு பள்ளம் ரோடு, லட்சுமி கார்டனில் உள்ள அவரது இல்லத்தில் இயற்கை எய்தினார் என்கிற செய்தியினை அறிவிக்க வருந்துகிறோம்.

அம்மையாருக்கு ஆ.ஜெயக்குமார், ஆ.மனோகரன், ஆ.வைரமணி, ஆ.செந்தில்குமார் என்கிற 4 மகன்களும் ஆர்.வாசுகி என்கிற 1 மகளும் உள்ளனர். ஆ.மனோகரன் முன்னாள் வார்டு கழக பொறுப்பாளர், ஆ.வைரமணி முன்னாள் வார்டு கழக செயலாளர் பொறுப்புகளில் பணியாற்றினர்.

அம்மையாரின் மறைவுச் செய்தியறிந்த மாநில, மாவட்ட, மாநகர, நகர, ஒன்றிய, பகுதி, பேரூர், ஊராட்சி, வார்டு, கிளை கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், கழக உடன்பிறப்புகள், சமுதாய பெரியோர்கள் அன்னாரின் உடலுக்கு மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினார்கள்.

அம்மையாரின் இறுதிச் சடங்கு 18.6.2023 ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணியளவில் ஈரோடு காவிரி கரையில் அமைந்துள்ள ஆத்மாவில் நடைபெற்றது.

செஞ்சியில் நடைபெற்ற ஜமாபந்தி நிறைவு விழாவில் நரிக் குறவர்களுக்கு ஜாதி சான்றிதழ்களை சிறுபான்மையினர் நலன்மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள்நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் வழங்கினார்.அருகில் கலெக்டர் பழனி, சார் ஆட்சியர் கட்டா ரவி தேஜா, ஒன்றிய சேர்மன்கள் விஜயகுமார்,அமுதா ரவிக்குமார் மேல்மலையனூர் ஒன்றிய செயலாளர் நெடுஞ்செழியன் வட்டாட்சியர் நெகருன்னிசா உள்ளனர்.

வேலூர் மத்திய மாவட்டத்தில்

ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர் இளைஞர் அணி விருப்பமனு பெறுதல்!

மாவட்டச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

கழக இளைஞர் அணி செயலாளர், அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவிப்புக்கு இணங்க வேலூர் மத்திய மாவட்டத்தில் ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர் வாரியாக கழக இளைஞர் அணி அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் விருப்பமனு கீழ்க்கண்ட தேதியில் பெற்றுக்கொள்ளப்படும்.

நாள்: 26.06.2023, 27.06.2023 மற்றும் 28.06.2023 மாலை 5.00 மணிக்குள்.

எனவே ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர் வாரியாக அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் பதவிக்கு விருப்பம் உள்ளவர்கள் விருப்ப மனுவை பூர்த்தி செய்து வேலூர் மத்திய மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் வழங்கிடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ.
செயலாளர்
வேலூர் மத்திய மாவட்ட தி.மு.க.